296

ஸ்ரீ

இஃது

பார்ஸி ஹிந்துஸ்தான் டான்ஸ் டிராமா
திருப்புகழ் சிந்து புதிய நூதன
வர்ணமெட்டுகள் அடங்கிய

296
4.13



MADRAS

# பாலகிருஷ்ணன்பேரில்

# இந்துஸ்தான் பஜனை

இஃது

மதுரை தெற்குமாசிவீதி மகா-ள-ள-ஸ்ரீ மதுரகவி லெ. கோ.
பழனிக்குமாரு தாஸரவர்களா லியற்றியதை

மதுரை புக்ஷெல்லர், பி. நா. சி. ஏஜண்டு
மு. கிருஷ்ணபிள்ளை அவர்களால்,
மதுரை திண்டுக்கல் ரோட், மஹமதியன் பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

(...லை) 1913 (அணா 4

Q22:417
N13
18003

ஸ்ரீ



ஸ்ரீபாலகிருஷ்ணன்பேரில்

பழனிக்குமாரு தாஸ் பாடிய

# பார்ஸி இந்துஸ்தான் கீர்த்தனை

வெண்பா.

கண்ணிற் றுளபமதைக் கண்ணபிரானே தரித்தாய்
புண்ணியர்க ளெல்லவரும் போற்றினர் பெண்களுமே
யெண்ணியுனையே நினைத்தே யெட்டாதுறியிலுற்ற
கிண்ணி வெண்ணெயுண்ட ஹரீ கிருஷ்ட்ணா

கணநாதா என்ற வர்ணமெட்டு

இராகம்-நாட்டை-தாளம்-ஆதி.

1. பல்லவி.

ஹரி ராமா உய
ராதி-நீதி-கியாதி-நேதி கீதி-யோதினேன் ஹரி

அநுபல்லவி.

புரியுடன் ஆயர்கட்கு கிரியை யெடுத்துக்கொண்டு
பிரியமுடன் ரக்ஷித்தாய் தரிசனந் தந்தருள்வாய்
புடக மலர்ப்பாதனே வடகமாய்த் திடமாயென்
னிடரதை நொடிதனி லிடமதி லகற்றிடும் ஹரி

சென்னை-600 008.

## பாலகிருஷ்ணன் பேரில்

சரணங்கள்.

நமதுகள் மீறிய தசக்ரீவன்றனைத்தானே
ன்றநீ சென்றுவென்று அத்ததியில்நன்றுடனே வந்து
[நின்ற பூபதியே
லங்கள் நலமுடனே இலங்கும் நவரத்தினம்
லங்காரத்தோடணிந்து உலகமெலாமளந்த ஹரி
ருமறைமுறையிடுங் குருவேதிருவே அந்த
ியன்றன்னையே சீறுடன்மறைத்தாய் நேரிற்பழனிக் குமாரு
[தாஸனையே
னுதினஞ் சினமதை நினைவாய்கனமாய் விட்டு
ாண்களும் பணிந்திடு மனமகிழ்ந்தருள்செய்வாய் ஹரி

---

ஸாதுஷாதுமானது என்ற பார்ஸி வர்ணமெட்டு.

பல்லவி

ஏதுஏது ராகவா மாதுலட்சுமி நாயகா ஏது
துகதியே பொதுநிதியே விதுகெதியே யெண்ணுதியே மாது

அநுபல்லவி.

போதும்போதும் பூமியிற் சூதுவாதுசாதுவே
இரன்மீது யித்தனைவாது வைத்திடாகாதுயிப்போதினி மாது

சரணங்கள்

ராம அவதாரனே மாமனை வென்றவனே
நம்பினேனுந்தன் செம்பொற்பாதத்தை அம்புவிதனி லெம்பி
ரானே மாது
தாஸன் பழனிக்குமார் தமிழுதனைப் பாடினேன்
சாமியேயானும் நேமமாய்ப்புகழ்ந்தோமெனைநீயே ரட்சிப்பாய் மாது

—:(*):—

பியாரீதோரி பியாரிஷானென்ற மெட்டு.

இராகம்-ஹிந்துஸ்தான்-பியாக்-தாளம்-சாப்பு

பல்லவி.

சோதையருள் பாலனே சுகிர்தகுணலோலனே சோதை

அனுபல்லவி.

சீதையின்மனோகரா பேதையின் றுயர்தீராய்

கீதைக்கருள்தா க்ருபாகரா கெருடவாகன ஒய்யாரா சே

சரணங்கள்.

சாதுகட்குகந்தனே மாதவாமுகந்தனே

நீதிதவரா வைகுந்தனே நிதம்பணிந்தேனுந்தனே சே

செந்தாமரைப்பாதா யெந்தன்மீதில் வாதா

மைந்தனுக்கேநல்வரந்தாதா மண்ணளந்தவாநீதா சே

நேசமாய்ச்சொல்சீரை ஆசையாய்க்கண் பாரே

தாஸனும் பழனிக்குமாரு தன்னையாளுமே நேரே சே

துமப்பினமோரி யென்ற வர்ணமெட்டு.

இராகம்-ஹிந்துஸ்தான்-தோடி-தாளம் ஆதி.

4 கண்ணிகள்

தசரதபாலனே சற்குணசீலனே சதுர்மறைகளறிந்த மேலனே

தஸஅவதாரனே சர்வகெம்பீரனே தமியனையாதரிப்பாய் வீரனே

வேதவேதாந்தனே வித்தைக்குகந்தனே விண்ணவர்கள்புகழ் வைகுந்தனே

சாதனைசெய்வது சோதனையோயிது சஞ்சலமதைத் தீரிப்பே

பழனிக்குமாரைபக்ஷம் வைநேரே பாடலதனைக்கடைக்கண்பா

பிழையணுகாமல் பெருமானே முன்னிற் பேரின்பவரமதைத் தான்தாரு

—):*:(—

கைஸே நாஜுவதாஸேதூ ஆக் என்ற மெட்டு.

இராகம்-ஹிந்துஸ்தான்-பியாக்-தாளம்-ஆதி

5 பல்லவி

கொஞ்சமேனும் ஸ்ரீரகுநாதா வுன்னெஞ்சமிரங்காதென்னவாதா

அனுபல்லவி

தஞ்சமென்றே யான்வந்தேனேவேதா நீ வஞ்சத்தைவிட்டுவ
தாதா

செஞ்சொல் முன்பஞ்சபாண்டவர்கட்குத் தூதா வுன்னெஞ்சப

சரணங்கள்

மைந்தன்றனையாள்வதிற் பாரமோ க்ஷணம் வர்மவுக்குவெகு தூரமோ
விந்தாநின் கஞ்சமலர்ப்பாதமேதாதா வுன்னெஞ்சமிரங்கா (கோ
சரியைகிரியை யோகந்தானேநல் ஹரியே சாதனே கடந்தோமே
உறிவெண்ணெ யுண்டோன் குஞ்சரத்தைக்காத்தநாதா வுன்னெஞ்ச
ஆசையாகத்தினமுங கொண்டாடி யித்தாஸன்பழனிக்குமார்பாடி
வாசமல ரணியென் சஞ்சலத்தைத்தீர்ப்பாயே நாதா வுன்னெஞ்ச

---

இராகம்-ஹிந்துஸ்தான்-தாளம்-சாப்பு

கொங்கை சிங்காரி நானே என்ற மெட்டு

6 பல்லவி

கண்பா ரகு ராமனே கடைக் கண்பா ரகு ராமனே
கரிவரதா-அருளுடன் பரிவுடனே குருவேநாளுங்கண்பா

அனுபல்லவி

கன்னனைத் திண்ணமாய் வண்ணமாகநின்று எண்ணலர்போற்றி
[டவே
கண்ணலாய் மண்ணவர் தண்ணவனும் நன்று யெண்ணிக்கை
[யேற்றிடவே
கண்ணஞ்சல் செய்தேனே யுந்தன்பாதங் கண்ணைத்திறந்து
[காக்ஷிதா நீதங்
கதிரவனையதி வேகமா யிதியுடனே ததிமறைத்த
காரணதிரு பூரணயெந்தன் தூரல் நீக்கியிப் பாரினிதனிற் கண்
[பார்

---

சரணங்கள்

பாதிராத்திரிவேளையிலென்ற வர்ணமெட்டு.

காகப்புள்கோர்கண் பூகமாய்த்தந்த நாகசயன தீரா இனி
காகருடியவதார மானகருடகேதன வீரா அந்த

காகநிதன்னை மேகவண்ணா தேகத்தில்மாலையணிந்தாய் கண்ணா
கடவுளேதான் திடமாகவே கடலிற்பள்ளி இடமாய்க் கொண்ட
கர்த்தனே பரிசுத்தனே கணசித்தனே தவமுத்தனே எனக் கண்

---

திருவுற்றிலகுகெங்க என்ற வர்ணமெட்டு.

கானகந்தனில் வேடனும் ஞான மில்லாமலே நாவாற்
கருத்தறியாமலே ராமாவென்பதை மராமராவென்க்
கருணாகரன் வாய்திறந்துமொழிந்ததை கேட்டு
கருணையோடுமவனுரைத்தானே யிதை நற்
காட்சிபெற முத்திதந்தசெல்வா தாழ்ச்சியன்றியிங்குவாவல்லவா
காரிகைமுதல்நேரி லறிந்தாய் ஊரிசக்கரம் நீரும்பிடித்தாய்
கருடவாகனா குருமணிபுகழ் பெருமைகள்பெற்ற திருமாலேநீகண்

வண்ணத்தினை மாவைத் தெள்ளியே யென்ற மெட்டு.

காசினியோர்பணிநேசா மத காமனைத்தந்த சர்வேசா . என்
கண்ணேகண்மணியே யீசா நீருங்
கமலையாள்தேவாசுந்தராஜனே தமியன் பழனிக்குமார்தாஸனே
காத்திடவுங் கீர்த்தியதாய் பூர்த்தியாக நேர்த்தியுமாய்
கற்கண்டேயென் சர்க்கரையே முக்கனியே யிக்கணத்திற் கண்பார்

---

திருச்சினச்சாரியா மென்றவர்ணமெட்டு

இராகம்-ஹிந்துஸதான்-தேசிகத்தோடி தாளம்-ஆதி.

7 பல்லவி

திருமலைதனில்வாழ்தேவனே நீவரந்தா ஸ்ரீ ஹரியே தேவனேநீ
சீதைதன்னுடனே சீதைதன்னுடனே சீதைதன்னுடனென்
முன்புவாராயுன் திவ்யபதமதனைத்தாராய் திருமலை

அனுபல்லவி

திருப்பாற்கடலதின் தேவாவமுதந்தனையே மாதவனே தேவாவ
தேவர்க்கேஆவலாய் பகிர்ந்தனையே அருமாயுரைக்கோ

மானேநாதாவெகு	க்ஷேமாதிக்ஷேமங்களோத்தாதா	திருமலே
கோசலேக்குமராக்	கொடியவர்சமராவா	நாளுந்துற்கொடி
மேலுந்துற்கொடியவர் சமராவா	தாஸன் பழனிக்குமார்
புகழ்ந்தேன்ஐயா வந்துபிழையன்றி யாதரிப்பாய்மெய்யா நற்திரு

---

பசிக்குதேவயர் பசிக்குதேயென்ற வர்ணமெட்டு.

3

பல்லவி

ராமனே	பரந்தாமனே

அனுபல்லவி

நாமமாயிரஞ் க்ஷேமமாய்க்கொண்டு வீமன்முதலோரை காத்தவாம
னனே
நேமனே பன்னிருநாமனே	முந்நாளிற் காமனையெரித்த
சோமன்றோளா சர்வபூமனே	கந்தன்மாமனே	ராமனே

சரணங்கள்

ஆதியே	பரஞ்சோதியே
மேதினிதனில் நீதியெங்கும்	பிரக்கியாதியாய் நின்ற மாதவனை
சோதில்லாதவசோதை பாலாநற்	கீதிகள்பாடிடுஞ்
சாதுகட்கருள் தாதிருவடி	யோதியே

நாதனே	மாவினோதனே
ஏதுயென்மீதில் வாதுசெய்வதகாது	ஆதலால் போதும்போதுமே
சாதனேசெய்வது சோதனேயோ	யிதுயாதனையைநீக்கும்
வேதமுமறிந்ததாதனே	ஐவர்தூதனே

நாரணா பரி	பூரணா
சூரியன்குலத்தில்	நேரினுதித்தோனே	கோரிப் பழனிக்கு
மாருமுரைத்தேனே	வாரணமதனிற்	காரணமாய்ப்பள்ளி
வீரணனேகொண்ட	தீரனனகெம்பீரணா	வாவுதாரணா

---

தாரியாரிசேலேலோ என்ற வர்ணமெட்டு

ஹிந்துஸ்தான் நோட் தாளம் ஆதி

௯ பல்லவி

ராமாராமாவென்றுவுன்னை நம்பினேனையா யெப்போதும் ரா

அனுபல்லவி

வாமனவதாரா சோமன்றனொளா நேராய்
காமனைத்தந்தோனேநாளும் நேமமுடன் வாசிமானே ரா

சரணங்கள்

மாதவனேயின்று மயங்குரேனேநின்று
ஆதரவாகயிப்போது அடியவன்றுயரை நீக்க ரா

சோதையருள்பாலா சொர்க்கவீட்டின் மேலா
சீதைமணவாளாயுன் திருவடி தனைப்பணிந்தேன் ரா

பழனிக்குமாரைப் பாதுகாப்பாய்நேரே
பிழைகளும்வாராமற்சீரைப் பெருகவேகண்பாரே ரா

---

இராகம் பார்ஸி தாளம் ஆதி பியா ஆவனு என்றவர்ணமெட்டு.

10 பல்லவி

ரகுராமனேயுனை நம்பிவந்தேனே பரந்தாமனே ரகுராமனே

---

எனை ரக்ஷிக்கவாவா வா நற்கருடனேறி ரகுராமனே

கெஜல்

நாதாந்தமெனத்தையறிந்த மேலானவேதவேதாயுன்
பாதாரவிந்தந்தனை பணிந்தேன்கிருபைதாதா
மலர்ப்பாதனேயினிப்பத்தர்கட் கிரங்கும்விநோதனே கண்ணாற்
பார் பார் பார் பஞ்சவர்தன் மித்திராரகுராமனே

கெஜல்

கரியதுவுந்தடாகத்தின் தாகவிடைக்கிச்செல்ல
ஒருநிமிஷமுதலையத்தியின் கால்பிடிக்கநல்ல
ஆதிமூலமேயென்றளரும் வார்த்தைக்கிச்சோதிமூலமே
அக்ஷணம்தான் தான் தான் அருள்தந்த ஹரிரகுராமனே

கெஜல்

அந்தநாள்சுக்ரீபன்வந் தபயமிடக்கேட்ட
நந்தகோபன்சுதனே யோடிவந்துவரமீய்ந்திட்ட
காசினிதனில் தாஸனும் பழனிக்குமாருக்கே நாளுங்
காக்ஷியைத்தாதாதா கார்மேகவண்ண ரகுராமனே

சுந்தரபியாரிமைஹோ என்ற வர்ணமெட்டு
இராகம் ஹிந்துஸ்தான் தோடி தாளம் ஆதி

11 பல்லவி

இந்தக்கொடுமை செய்வதேதையா ஸ்ரீமாதவனே
ஏதையாஸ்ரீமாதவனே சோதையருள்பாலகனே இந்த

அனுபல்லவி

எந்தநேரத்திலுந்தன் யினையடிக்காளாகினேன்
அந்தமாய்வைகுந்தம்வாழும் ஆதிமூலப்பொருளே இந்த

சரணங்கள்

கல்லைப்பெண்ணாக்கியோனே கபடசூஸதிரத்தோனே
தொல்லைவினையைத்தீர்த்தே சுகந்தாவா இக்ஷணத்தே
ஓசைக்கடலமுதே உலகளந்த ஸ்ரீபதே
தாஸனும்பழனிக்குமார் சரணமடைந்தேன் கண்பார். இந்த

தஸகுமாரேதூரகுவாஜ என்ற மெட்டு தாளம் ஆதி

பல்லவி 12

நந்தகோபன்மகனே யுனை நான்நம்பினேன் நந்த
நான்நம்பினேன் நான்நம்பினேன் நந்த

அநுபல்லவி

விந்தையாயர்மனையில் சொந்தமாகத்தானே
அந்தமுடன்நீயே முந்திவளர்ந்தாயே நந்த

சரணங்கள்.

தந்தைதாயென்று சந்தோஷங்கொண்டு
வந்தேனுந்தனையன்றி மாபாலகன்யான் நந்த
காடதிற்சென்று வேடனுக்கன்று
பாடவும்நாவால்நின்று பண்பாயுரைத்தாய் நந்த
பக்தன்பழனிக்குமார் பதத்திற்கருள்புரிவாய்
சித்தமகிழ்ந்தேயெனை சீக்கிரங்கண்பாரும் நந்த

---

ஆயேசையா என்றவர்ணமெட்டு

இராகம் ஹிந்துஸதான் அபுரூபம் தாளம் ஆதி

பல்லவி 13

தாசரதிதாமோதரனே நிதி தமியெனையாள்ஸ்ரீபதி ஜெக

அநுபல்லவி

ஈசனேசொர்க்கவீட்டிற்தானே பவநாசத்துரையாயமர்ந்தோனே
தித்திக்குஞ்சுத்தநேமா பக்தவச்சலசியாமா உத்தமசத்யராமாநற்
திருமலையிலுரைபவனே யொருபொருளேகுருவே . தசரதி

சரணங்கள்

வேதவேதா விண்ணவர்புகழ்நீதா வேண்டுவோர்விரும்பும் நாதா
தூதனுமையவருக்குமெய்யா வெகுசாதனையாகச்செய்தஜபா [முன்
சூரியகுலத்தோனே ஆரியுடனேயானே நேரினிற்பணிந்தேனே என்
துன்பந்தீர்த்தே யின்பசுகம் அன்புடனேமுன்தா தாசரதி
பத்மநாபா பதியளந்தகோபா பைந்துளபமணிமார்பா நின்
சித்தமிரங்கியருள்நீவா யினி சத்துச்சித்தானந்தனேசேவா
தேவனேயெந்தனுவால் ஆவலாய்புகழ்ந்தேன்காவா வாவாநற்பதந்தா
சித்நசனைப்பெற்றவனே அத்திரையைரட்சித்த தாசரதி (தாவாஅச்
மானுரிட்மடியுண்டோனேதிட மாகவேசொன்னேனேயடங் குரு
மீனாக்ஷிசுந்தரர்க்குகந்த சுதனுறைற்பழனிக்குமாருந்தன்
விந்தையாய்ப்பாதம்போற்றி சந்ததந்தொழுதேற்றி ஹிந்துஸதான்
விகிதமுடனககவாகனு யிகமதனிற்சுகமாய் தாசரதி [பதஞ்சாற்றி

சாமிநாதனைவடிவலாமேலா என்றமெட்டு

இராகம் பார்ஸி கவாய் தாளம் ஆதி

பல்லவி 14

நந்தகோபன்மைந்தனை ராமாநேமா கோடி
வந்தனங்கள் தந்தேன்பரந் தாமாபூமா

அனுபல்லவி

அந்தமாய்வைகுந்தம்வாழும் ஐயாமெய்யா யென்
பந்தவினையோடவேநீ செய்வாய்துய்யா

கெஜல்

விந்தர்மோக்கத்தில் வளர்ந்தயூகா நற்
சுந்தரராஜனைப் வந்தமோகா
நந்தகோபன்தந்தசெல்வ ராமாநேமா கோடி

சரணங்கள்

தென்றற்றேரோன்றன்னையீன்ற தீராவீரா யினி
யென்றுமுனையேநம்பினேன் பூராய்நேராய்
நன்றிசெய்தாய்ஐவர்கட்கு நாதாநீதா முன்
பன்றியுருவானமலர்ப் பாதாவேதா

கெஜல்

இன்றுமேவந்தெனையாளும் ஸ்ரீநிவாசா யுனை
யன்றிவேறுண்டோநாளு மலர்வாசா
வென்றியானமன்றிலேமா ராமாநேமா கோடி
திக்கெங்குமேநிறைந்திட்ட தேவாகாவா நின்
வக்கிரத்தைவிட்டுவரந் தாவாசேவா
பக்கமெல்லாம்பஜித்திடும் பாடிகூடி சங்கு
சக்கரமும்பிடித்தாய்கொண் டாடிநாடி

கெஜல்

இக்கணம்புகழ்ந்தேன் பழனிக்குமார்
சற்குருவேதாஸனைத்திருக் கடைக்கண்பார்
சுக்கைக்ண்டத்திலணிந்த ராமாநேமா கோடி

——

சையாரே ஹமரேகு என்றமெட்டு
இராகம் இந்துஸதான் தேசிகம் தாளம் ஆதி

பல்லவி 15

ஐயாயெந்தனைநீவந் தையாயெந்தனை
யாதரித்தாளாயோ

அனுபல்லவி

ஐயாவந்தாளாயோ மெய்முறைகேளாயோ ஐயா

சரணங்கள்

கொஞ்சமேனுமேவுந்தன் கொஞ்சமேயுன்
னெஞ்சமிரங்காதா
நெஞ்சமிரங்காதா பஞ்சவர்கள்தூதா ஐயா
காலனணுகாமலே காலனணுகாமல்
பாலனையாதரி
பாலனையாதரி மேலவாஸ்ரீஹரி ஐயா
அழகுஜானகிநாதா அழகுஜானகியும்
பிழையன்றிப்பணியும்
பிழையன்றிப்பணியும் பழனிக்குமாருடன் ஐயா

---

அவோஹாவோ சவாரியாகமாரீரேயென்றமெட்டு
இராகம் ஹிந்துஸதான் தோடி தாளம் ஆதி

பல்லவி 16

ராமாராமாயெனைக் கைவிடலாகாதே பாபம்
நேமாவுந்தனைவிட்டுப் போகாதே

அனுபல்லவி

சீமானேயார் தேடக்கிடையாதசெல்வமே நாளுந்
கோமானேநல்வர மதனைக்கொடுக்குந்தெய்வமே ராமா

சரணங்கள்

பக்தியுடனுன்பதம் நாடினேன் யினி
யித்தருணமுமேகொண் டாடினேன்
எத்தனைவிதஞ்சொன்னாலுன் சித்தமிரங்காதா முன்
அத்திசப்தமிட்டழைத்த வருள்தந்தநாதா ராமா
தாடகைசம்மார மன்றுசெய்தோனே யிப்

பாடலுக்கருள்புரி சீமானே
வேடன்வனத்தில் மராமராவென்றுரைக்க அம்
அம்மூடனுக்குப்பாடனுவில் மொழிந்தாயேமெய்க்க ரா
பாசபந்த மதனைநீக்குவாயே சரு
வேசனேநற்றமிழ்த் தாக்குவாயே
தாஸனும்பழனிக்குமார் தமிழ்தனைப்பாட நன்று
யாசையுடனுன்பத மனுதினமுங்கொண்டாட ராமா

இந்தவுடலைநம்பியிருக்கலாமா என்றமெட்டு
கண்ணிகள் ஓரடிப்பதம் 17

இந்தவாழ்வைச்சதமெண்ணலா மா
ஈசனைநாளுமறக்கலா மா
உடலுக்குமுயிருக்குஞ்சொந்தமா மா
உற்றுப்பாராமலுழலா மா
கருமியெனப்பேரெடுக்கலா மா
கருமங்களுந்தனைவிட்டுப்போ மா
தருமங்கள்செய்யாதிருக்கலா மா
தரணிதனிலுமக்குநல்பேரா மா
பணத்தின்மீதாசைகள்வைக்கலா மா
பாங்காயுன்கூடவுந்தான்வரு மா
பழனிக்குமார்சொற்பாடாதிருக்கலா மா
பாபதோஷமுமேநீங்கிப்போ மா

ஞானவடிவேல்முருகையா என்றமெட்டு
இராகம் பார்வி ஹிந்துஸ்தான் தாளம் சாப்பு

பல்லவி 18

உன்னைநம்பினேனபரந்தாமா ஓரகுராமா உன்னை

அனுபல்லவி

அன்னைபிதாவும்நீதானே ஆதரிப்பதார்சீமானே
என்னையாளுவாய்ஸ்ரீபூமானே யெம்பெருமானே உன்னை

சரணங்கள்

நாகமதிற்பள்ளிகொண்ட நாரணாவுன்பாதங்கண்ட
பாகவதாளுக்கருள்புரி பாரில்வா ஹரி உன்னை நம்பி
பாரமேஷ்டியைத்தந்தோனே பக்தர்கிரங்குங்கோமானே
ஆரட்சகன்குலத்துதித்தோனே ஐயாநற்கோனே உன்னை
ஆசையுடனே தான்தேடி ஆயிரநாமனைநாடி
தாஸன்பழனிக்குமார்தமிழ்பாடி சந்தங்கொண்டாடி உன்னை

---

துனியாச்சாரி என்றமெட்டு

இராகம் பார்ஸி ஹிந்துஸதான் தாளம் ஆதி

பல்லவி 19

ஹரியேவுந்த னடிமைமைந்தனை யாதரித்திட ஓடி வா வா வா

அனுபல்லவி

கரிமுறைக்குடனே காக்கவந்தவனே கருணைவைத்திடுவாய்வைகுந்த
பரிபூரணனே திருநாரணனே பன்னிருநாமமுகந்தனே [னே
பதமே சிதமே நிதமே யிதமாய் சதமாய் மதமாய் பதியே முதல்வா
சரணங்கள் (ஹரி

கோசலைக்குமராகொடியவர்சமரா கொஞ்சம்நெஞ்சமிரங்காதாதீரா
தாஸனும்பழனிக்குமாருதமிழை சந்ததம்பாடினேன்ரகுவீரா
ததியில்நிதியாய் கதியாய்விதியாய் மதியாய்சுதியாயிதியாய்த்துதித்
தேன்

---

வாவாசண்முகனேயென்றமெட்டு

இராகம் இந்துஸ்தான் கவாய் தாளம் சாப்பு

பல்லவி 20

கருணைசெய்ஹரியே கடவுளே ஆதரியே கருணை

அனுபல்லவி

தருணம்வந்தெனையாளத் தடையேனோ தாமோதரனே
அருமாமறைமுடிவே ஆதிபரவடிவே கருணை

சரணங்கள்

கடலேகடலமுதேகட்டிக் கரும்பேகனியே
கிடமாய்மலர்சாற்றினேன் தேவாவுனைப்போற்றினேன் கருணை

திண்ணத்தெவிட்டாதசெங் தேனேதித்திக்குஞ்சீனியே
கண்ணேகண்ணின்மணியோ காவாகுருமணியே கருணை
தாஸன்பழனிக்குமார் சந்ததமுங்கொண்டாடினேன்
மாசில்லாதசர்வேசா வழகுசூர்யப்ராகாசா கருணை

---

என்னசெய்குவேன்சகிமாதே என்றமெட்டு
பார்வஸி ஹிந்துஸ்தான் தாளம் ஆதி

பல்லவி 21

ராமாவுந்தனைப்பணிந்தேனே பரந்தாமாதுளபமணிந்தோனே ரகு

அனுபல்லவி

க்ஷேமாதிக்ஷேமத்தைகொண்ட ஸ்ரீஹரியேவாவாபெருமானே ரகு

சரணம்

பானுவதைமறைத்தநாதா நல்ல தேனுவதினிலேறும்நீதா
ஆனுதருவாயேயந்த யானைதன்னைரட்சித்த நல்வேதா ரகு
சிம்மந்தனிலேஅழையாக முன்செம்மையுடனேகொண்டாய்மோக
அமமனைப்போலவேவந்து பெம்மானேயுன்னருள்தாரும்யூகா ரகு
சந்ததமும்பழனிக்குமாரு கோடி வந்தனந்தந்தேனிதோசிரு
அந்தகன்வாராமலென்னை யாதரித்திடவேகண்ணூற்பாரு

---

ஜப்தகலந்தருஎன்றமெட்டு
இராகம் ஹிந்துஸதான் தேசிகம் தாளம் ஆதி.

பல்லவி 22

ஆதிமூலமேயும தடுமையையானாவிடி
லாருண்டோவுமக்குச் சம்மதந்தானே
அயன்ஜனகாதிமுனி யாழ்வாரனுமான்பணி
யாண்டவனேரட்சிக்கத் தடையேனோ
மாலட்சுமியோடு மனமகிழ்ந்தராமா
சாதுக்களுக்காதரவு மானவாநேமா

நீதியேவைகுந்தவாசா
சோதிப்ரகாசவிலாசா
மாதவனே மேதினியிலாதரவாக

ஆதிநாராயணனுவுன் னடிமையையாளாவிடிலாருண்டோ
குடையாகவேமலையைப்பிடித் கெம்பீரவீர
கோதண்டபாணியான கோபாலா
குன்றெடுத்தோனேயன்று நன்றாகஆயர்மனக்
குறையைத்தீர்த்திட்ட மஹாகுணசீலா
வடமாலையணிந்த மாஹானுபாவனே
திடமாதையே நம்பினேன் தேவதேவனே
கடவுளேயிதென்ன வாதா
சங்கடமறிந்த விநோதா
அடரர்களிடர்செய்தா லடர்செய்குவாய்
அடியவன்மிடிமைகள்தடிந்திட வேறிளியாருண்டோ
சந்ததமுமுந்தனைச் சிந்தித்திடுமினிநற்
தாஸன் பழனிக்குமார் தமிழ்பாடி
சங்குசக்கரத்தோனே அங்கசன்றன்னைத்தந்த
தாமோதராகேசவா வுனைநாடி
நந்தகோபன்சுதனே நாதாந்தசீமானே
தந்திரவேதாசொரூப மந்திரத்தோனே
சுந்தரராஜ ஒய்யாரா
மைந்தன்மேற்கிருபைவைதீரா
பந்தவினைவந்திடா வரந்தருகுவாய்
அந்தமுடன்வந்தனந்தந்திடு மிந்தவேளையாருண்டோ

---

பாரமுகமேனையா என்றவர்ணமெட்டு
இராகம் ஆனந்தபைரவி தாளம் ஆதி.

25 பல்லவி

வாராதிருப்பதேதையா கிருபைதா வாராதிருப்ப

அநுபல்லவி

பூராய்ப்பாண்டிநகரிற் போராகக்கூடலிங்கத்
தூராயடியார்புகழ் சீராகவாழ்ந்திடுங்கண்
பாராய்துளபம்பூண்ட தீராயுனதுபாதந்
சாராய் அழகுள்ள கெம்பீராதி வீராநேராய்

சரணங்கள்

தாதுகலங்கிவிஷயன் வந்தானேநின்று தா
சூதெண்ணிபார்த்திபனைக் காதுசெய்திடவந்த
போதுபிரியின்மகனைக் கோதுபண்ணினுயன்று
தீதுவிஷமதையுஞ் சூதுநாகபாசத்தின்
மீதுகொன்றுயேநீயப் போதுயிப்போதுசா வா
திருப்பாற்கடலமுதத்தை தேவர்கட்கெல்லாந்திருப்பாற்
அருமையாயமரர்க்குந் திரிலோகமுழுவதும்
அன்றேயுதவிசெய்த ஆதியனுதியான
சோதியமுதமதை நீதிபகிர்ந்திட்ட ப்ரக்
யாதி கருடவாகன மீதிலேறியே ஓதி வா
ஆழ்வார்கள்தம்பூரைமீட்ட அனுமாருடனுழ்வார்கள்
வாழ்க்கையால்யாழிபூண்ட பேழ்பொருந்தியதேவா
தாழ்தல்செய்தேனுன்பாதம் வாழ்தல்தருவாயெனைநாடி
விரதமாய்க்கொண்டாடி பழனிக்குமாரைத்தேடி
ஆனந்தபைரவிகூடி ராகமும்பாடி வா

---

இத்தனைகோபமாகுமாளன்றமெட்டு

இராகம் ஹிந்துஸ்தான் பியாக் தாளம் ஆதி

பல்லவி 26

தாஸன்மேல்வாமமாகுமா தாஸன்மேல்

அனுபல்லவி

காசினியிலீசன்றன்னை நேசமாகப்பூஜிக்குந்தாஸன்

சரணங்கள்

அந்தமாய்சிங்குழலையுகந்து திருவாயாலூதி
விந்தையாய்வெயிலிற்பசு மந்தையைமேய்த்ததினுல் தாஸன்
உறியேறிவெண்ணெயெடுத் துண்டசெவ்வாயனே யுனை
உரல்தனிற்கட்டிவைத்தே வுடன்சோதையடிக்க தாஸன்
தம்பூர்வீணைபிட்டிலுடன் சாலர்மைத்தளமும்போட
ஆம்மாழ்வார்பஜனைபாட நற்பழனிக்குமாருதாஸன்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS MADRAS 18 OCT

சல்பல்கு பியாரிதோரி என்றமெட்டு முன்பின் மகுடம்

25 பல்லவி

நந்தகோபன்சுதனே செந்தாமரைப்பாதனே
மைந்தன்றுயரதனைத் தீர் தீர் தீர் பவ

அனுபல்லவி

நர்சனே ஜெகதீசனே துரைராஜனே நேசனே சருவேசனே ரகு
நாதனே நீதனே சூதனே மாவினோதனே எனை
ரட்சித்தருளுங்கருடப்பட்சிதனில் மீதேறி
லட்சுமிநாயகனேகண் பார் பார் பார் நன்றாய்
யச்சுதனானவா யெங் கேர் நேர் நேர் ஹரி
நாரணா பரிபூரணா ஜெகத்காரணா இனிநந்தகோபன் சுத

சரணங்கள்

18037

சத்யசொரூபனேயுன் சித்தமிரங்கி மிகப்
பக்தியுடனேவரந் தா தா தா மலர்
சாற்றினேன் றெழுதேற்றினேன் நாளுஞ்
சாற்றியேபின்வாழ்த்தியுனைப் போற்றினேன் க்ஷணந்
தாமதமன்றி சுவாமியே நேமியே பூமியில் நற்
சத்துச்சித்தானந்தனே முத்திதா கோவிந்தனே
நித்யபிர்மானந்தனே ராம் ராம் ராம் கருணை
வைத்தேயாளுவாயரி ஓம் ஓம் ஓம் மா
சாதுக்கள்புகழ்ந்தோதுவோர்களைப்பாதுகாத்தருள்நந்த

காமன்றனையீன்றவா மாமன்றனைக்கொன்றவா
தாமோதரமாதவா வாவாவா ஆதி
கர்த்தனே பரிசுத்தனே எங்கள் கர்த்தனே நிர்த்தனே தவ
முத்தனேவந்து காவாசேவாதேவா மஹானுபாவனே யிக்
கழிநெடில்தானிது பழனிக்குமார்சொல்வதைப்
பிழைவாராதிருக்கவே செய் செய் செய் யிது
கழிக்கரைப்புலம்பலு மெய்மெய்மெய் சுக
காருண்யாகண்பாரையா கலிதீரையா உயர்நந்த

ஜாம் ஜாம் ஜாம் பியாரி என்றமெட்டு இன்தோடி தாளம் ஆதி

26 பல்லவி

ஓம் ஓம் ஓம் நமோ நாராயணாவென்
றுன்னிருதாளடியை யான் யான் யான்

அனுபல்லவி

ராம் ராம் ராமெண நாள்தோறுந்துதித்தேன்
ரட்சித்திடுமையனே நம்பினேன் தருணம்
ராகவா மாதவா நற்கெதியுந்தாருமே
நாரணா காரணா பூரணா தாரணியிலோம்ஓம்

சரணங்கள்

தாஸன் பழனிக்குமரர் தமிழ்தன்னைப்பாட
சதுர்முகப்பிரமாவுந் தானே கொண்டாட
தாஸரதி யெனக்குன் னருளது கூட
சாதுசர்ச்சனர்களுந் தாளங்கள்போட ஓம் ஓம்

---

வந்தனங்கள் தந்தேனிதோ மந்த காசமா யென்றமெட்டு
இராகம் மோகனம் தாளம் ஆதி

பல்லவி 27

சந்ததமு முந்தன்றளுக் கெந்தன் வந்தனம்

அனுபல்லவி.

பைந்தமிழ்ப்பாடியே பாண்டிக்கூடற்பெருமாள்
அந்தமாய்க்காளிங்கன்மீ தாடுந்திடர்பணிய சந்

சரணங்கள்

பேணியர்குலந்தனில் வேணுகோபாலனேயுன்
மேனியதையுந்தாக்கி பிரபல்யமாக்கி
ஆணிப்பொன்னலமைத்து மாணிக்கரத்தினம்
வாயப்பணமாக்கி மாபதந்தாக்கி

பாணியைக்கேள்க்கின்ற கியானமுடையோர் வந்து
காணியுடனேநோக்கி கஷ்டத்தைநீக்கி
கோணியவதாரத் தோனுமேதானன்று
கோணமேறியேசிக்கி ரமாகத்தேக்கி
கோணையன்றிலட்சுமி தனைவசமாக்கி
வேணியிலொருபாத மாடுவதைவணங்கி சங்

அஞ்சிவந்தகுஞ்சரஞ் சஞ்சலமதுதனை
ரஞ்சிதமாகத்தீர்த்தாய் அதனைக்காத்தாய்
நஞ்சையுண்டவருக்காய் பத்மாசூரன்றன்னையும்
நாடியேதான் வதைத்தாய் நலபாய் ஜெயித்தாய்
பஞ்சவர்களுக்காக மிஞ்சுந்திரியோதனர்கள்
படைதனைச்சங்கரித்தாய் பாங்காகவைத்தாய்
வஞ்சகஞ்செய்திட்ட கஞ்சனை முன்நாளில்
துஷ்டமாகவேகொன்றாய் துணிந்துநின்றாய்
கொஞ்சமேனுமேவுந்த னெஞ்சிரங்காதா
அஞ்சணங்கமெப்போது மறிந்தாயுன் பாதந்தொழ சங்

நன்னயமாகவே அனுமான் கருடனுடன்
நாரதர்வார்த்தை காட்டி ஞானத்தின் கோஷ்டி
பன்னித்திரியாழ்வார்கள் பண்பாகவீணை தம்பூர்
பாங்குடனேமீட்டி பாரிற்சபைகூட்டி
கின்னரர்குபேலவர் சூரியர் சந்திரர்
முன்னே மத்தளஞ்சூட்டி மிகவே நாட்டி
உன்னிதமாய்மேனகை யரம்பைதிலோர்த்தமை
யூர்வசிகளும்போற்றி நடனஞ்சாற்றி
சொஃனேன்பழனிக்குமார் தமிழதைப்பாடி
மன்னவர்புகழ்மஹா ஞானிகளுடன் கூடி சங்

நெஞ்சமேயிந்த மானிடர்வாழ்வு என்றமெட்டு அடாணா ஆதிசாப்

28 பல்லவி

மனமே சொன்னேன் மனிதர்கள் வாழ்வது சதமா அரு
மறைமுறையிடுந் திருமகளுமே மருவியிருந்த
முராஹரிதனைச் சரணடையாத அறிவுகெட்டமனமே

அனுபல்லவி

கனவிலும்நினைவிலும் அனுதினம்பணத்தாசை
கனமாகவேயனைவருட தனமதனை முனமேயெண்ணி
கடகடவென்று வடகமாய்நின்று யிடமதிலன்றுதிடமுடன்செல
கன்னங்கொலையிற்சிறந்து நன்வழியதனைமறந்து
காமக்கடலைக்காதலாய் நேமியையெண்ணு துஷ்ட மனமே

சரணங்கள்

நீர்மேற்குமிழியை நிச்சயமாய் நம்பி
நெடுமால்தனக்கடிமைசெய்யா திடும்புபேசிகடுமையாகி
நிடர்வருமுன்புபடி மீதினி லடியார்களினடிதொழரமற்
கின்னைப்பெரிதென்றெண்ணியே பின்னொருவருமிலையெண்ணியிற்
நிந்தம்பழனிக்குமாரு செந்தமிழையெண்ணுபாழ்மனமே

இன்னமிரக்கமில்லையா என்றமெட்டு இன் தோடி சாப்பு

29 பல்லவி.

இன்னங்கிருபையில்லையா மாதவனே இன்னங்

அனுபல்லவி

உன்னையன்றியே சீமானேசீமானேசீமானே இன்னங்

சரணங்கள்.

சோதையருள்பாலனே சுகிர்தகோபாலனே
சீதைமனவாளனே வாளனே வாளனே இன்னங்
பஞ்சவர்தன்மித்திரனே பாரிற்கபடசூஸ்திரனே
அஞ்சலிசெய்தேன் கோமானே கோமானே கோமானே இன்
கோசலைக்குமாரராபழனிக் குமாருதாஸனும்பணி
மாசில்லாத நவமணி நவமணி நவமணி இன்

ஐயோ யென் ஜானகியை என்றமெட்டு பார்ஸி-சாப்பு

30 கண்ணிகள்

துவாரகாபுரிவாசா சூரியப்பிரகாசா
துதித்தேன் சுந்தரராஜ துரையே துரையே துரையே
தாடகைசம்ஹாரா வேடனுக்கருள்நேராய்
பாடமொழிந்தாய்சீராய் துரையேதுரையே துரையே

நாகத்தின்மேலன்று யூகமாய்ப்பள்ளிகொண்டு
மோகமுடனிருந்த துரையே துரையே துரையே
கோமளமாம்பழனிக் குமாருதாஸனும்பணி
குருவேதுளபமணி துரையே துரையே துரையே

---

ஸ்கேபுரா ஜிஞ்சால் என்ற டான்ஸ் வர்ணமெட்டு தாளம் ஆதி

31 பல்லவி.

ரட்சிப்பதுன்பாரமே தாமோதரனே சீலா
தசரதபாலா சமையம் வருவாய்

அனுபல்லவி

பட்சியின்வாகன பங்கயநயன
பாற்கடலதனில்சயன தாமோதரனேசீலா தசரத

சரணங்கள்.

நேமமாகவேபூஜித்தேன் தாமோதரனே சீலா தசரத
காமனைத்தந்தவா கவிஞர்க்குகந்தவா
நாமமாயிரமுங்கொண்டவா தாமோதரனே சீலா தசரத
உன்னையன்றியிரக்கம் தாமோதரனே சீலா தசரத
இன்னுந்தாராதிருந்தா லென்னசெய்வேன் முகுந்தா
பின்னையார்துணை தான் வைகுந்தா தாமோதரனே சீலா
ஆசையுடன் கொண்டாடிந் தாமோதரனேசீலாதச
தாஸன் பழனிக்குமார் தஞ்சமென்று நம்பினேன்
நேசமுடன் வரந்தருவாய் தாமோதரனே சீலா தசரத

ஹிந்துஸ்தான் பார்வி தேசிகம் தாளம் சாப்பு
பாடம்ப டித்துப் பகலிலுறங்காதென்ற மெட்டு
கண்ணிகள்

ராமாராமாவென்றே நாவிலுனுந்தனை நம்பினவனல்லவா
கோமானேயுன்மத்தம் நேயனே நீ செய்த குற்றங்களைச்சொல்லவா
கோபிகாஸ்திரி குளிக்கவுஞ் சேலையைக் கொண்டு மரமேறி
காபிராகம்பாடினுனுன் புடவை கையிற்றாரேனென்றார்மீறி
மந்தகாசமல ரந்தரமாகவே மாதவா அப்போது
தந்திரமாய் ருக்மணியின் றன்னிடந் தந்தாயே புவிமீது
நந்தவனத்தைக்காத்திருந்த காவலன் நாடியே பார்த்தல்லவா
சி னந்துவந்தவன் வைகுந்தனென்றவ் வேளைசென்றாரே தானல்லவா
எட்டாதுறியில்வைத்திருந்த வெண்ணெயெடுத்துண்ட செவ்வாயா
குட்டாரந்தன்னைக் குடையாகதிஷ்டித்த கொண்டல்வண்ணமாயா
அந்தநாளிற்பசுமந்தைகளை மேய்த்த ஆண்டவநீயல்லவா
செந்தமிழ்ப்பாடும் பழனிக்குமார்வாக்கை செப்பினனேவல்லவா

ஐயையோ பெண்பாவம் என்றமெட்டு தாளம் ஆதி

33 பல்லவி

காளிங்கநிர்த்தனனேஎன் கலிதீர் நாகசயனனே காளிங்

அநுபல்லவி

வாளிச்சிமேனியணி ஆளிமுரசோனை யங்
காளினிற்தந்த ரகுராமா
பாளிதங்கொண்டுனது தாளினை நேமா
பணிந்துயர்ச்சித்தேனே யான் ஸ்ரீபரந்தாமா காளிங்

சரணம்

சுக்ரீவனரியிடம் யிக்கட்டுவந்ததென்று
அக்கணத்தினில் முறையிடவே
சொர்க்கத்திற்குகந்தோன் வா லியைக்கொன்றிடவே

சக்ரீவனுக்கேபட்டஞ் சூட்டிமகிழவே காளிங்
அகஞ்செய்தசக்ரீவனைக் ககவாகனனுமே
பகையாள்விபீஷணர்க்கு அன்று
இகத்தினிலதஞ்செய்தே யிலங்கையை நன்று
ஈசா அரசாளவைத்தாயே நீநின்று காளிங்
குருமுனிபுகழ்ந்திடும் அருமறைப்பொருளே
திருமகள்மருவிய தேவா
பெருமானேபழனிக்கு மார்தமிழ்க்காவா
பேரின்பவானந்தமாடியே வாவா காளி

---

ஆறுமுகமானலோலனே என்றமெட்டு தாளம் ஆதி

34 பல்லவி

ஆதிமூலமானநாதனே பரஞ்சோதியானக்கியாதனே

அனுபல்லவி

மேதினியிலுந்தனே நீதியுடன்றுதித்தேன்
வேதாமலர்ப்பாதாகுண நீதாசுகபோதாநாளும்
வேண்டியேயான்வந்தேனே யிப் பாண்டிநகரிற்றுனே ஆதி

சரணங்கள்

மச்சாவதாரனே லட்சுமி மோகனே
வாருங்கண்ணுற் பாருங்கலி தீரும்வரந்தாருமே
வைகுந்தவாசகனே அந்த ஐவர்கட்கும் நேசனே ஆதி
பிரகலாதனுக்காக ஹிரணியன் மார்பதனைப்
பிளந்தே தூணிருந்தே நீ சினந்தே குடலெடுத்துப்
பேலிவாகனநாதா நன்றாய்மாலைபூண்ட விநோதா ஆதி
தாஸன் பழனிக்குமார் நேசன்றமிழ்ப்பாடி
சாமியே காமியே நேமியே வாமியே
சாற்றிமிகவேயானே யுனைப் போற்றிசெய்தேன் கோமானே

நமசிக்கைஸே என்ற மெட்டு இன் தோடி தாளம் ஆதி

35 பல்லவி

நாராயணனே நந்தகுமாரனே ஞாலமதிலுனை நம்பினேன் தீரனே நா

அனுபல்லவி

க்ஷீராப்தி சயன தேவாதிதேவா சித்தம்வைத்தெனையாளும் (ஸ்ரீசோதைபூபா

ஆராதாரங்கடந்த ஐயனே வாவா ஆயிரநாமாவுமதடியனைக்காவா நா

சரணங்கள்

கரிமுறைக்குடனே காக்கவந்தவனே கருடவாகனமேறி வருவாய் (சீமானே

ஹரியேவுனையன்றிவே றுருங்காணேனே
ஆதிமூலமேவுந்த னடிதொழுதேனே நாரா

அம்புவியிற்பிரகலாதன் ஹரி ஓமெனவே
அவைதனிலிரணிய கமாவென்றுரைக்கவே
சிம்மமாய்க்கம்பமதிற் சினமாயுதிக்கவே
சீக்கிரமிரணியன் மார்பைப்பிளக்கவே நாரா

சந்ததமுமீனாக்ஷி சுந்தரர்க்குபகாரா
தாமோதரனேசரு வேசலுய்யாரா
வந்தனஞ்செய்தேனுந்தன் மலர்ப்பாதந்தாராய்
மதனேட்மூனிக்குமார்க் கருளதுநேராய் நாரா

—:(✻):—

தாசராஜ என்ற மெட்டு இன் தோடி தாளம் சாப்பு

36 பல்லவி

ஆதிமூலநாதனுன ஹரியேஸ்ரீபதியே வுனை
யன்றிவேறுகதி யொன்றுங்காணே னெனையாளுந் தயாநிதியே

அனுபல்லவி

மேதினியதனிலே நீதியாய் நம்பினேன் சோதிச்சுடரொளியே
விண்ணவர்கள்புகழுங்கண்ணனேயருள்தர வேண்டினேன்பரவெளியே
வித்தகனேயித்தி பக்தியுடனுந்தனை நித்தமும்பணிந்தேனே நி. நி)

சென்னை-600 008

சரணங்கள்

மச்சால தாரா வச்சுதா வாமனரூபா ஸ்ரீராம
வராகசிம்மபல ராமனுனதுளப மாமணிமார்பா
பச்சைமால்வண்ணனே அச்சுதன் நீதானே பாற்கடற்றுயின்றோனே
பன்னகசயனனே யென்னிருகண்மணியே பன்னிருநாமா யினியே
பழனிக்குமார்தாஸனும் பிழையன்றியேகொண்டாடும்
அழகுஜானகி நாதா அழகுஜானகி நாதா அழகுஜானகி ஆதி

---

ஆயரே சம்கிச்சாடியென்றமெட்டு பார்ஸி தாளம் ஆதி

37 பல்லவி.

ராமனே யெந்தன்மீதில் வாதா மீதில் வாதா மாதவா சூரா நன்
னெடுமாலேயடியவன் பிடிமையை நொடியிற் தீர் ராமனே யென்

அனுபல்லவி

காமன்றனைத்தந்த பாமரரைவென்ற
கருடகேதனுய் நின்ற தேவாகருடகேத
கரிதனைக்காத்தாய் பிரியைநீசேர்த்தாய்

ஹரிஓம் ஸ்ரீராம்

கஞ்சனைமிஞ்சியே தும்ஸமாய்வென்ற ராமனே

சரணங்கள்

பன்னகசயனு பங்கயநயனு
பழனிக்குமாருதாஸனை தேவாபழனிக்குமாருதாஸனை
பாற்கடல்வாசா பக்தர்கள்நேசா கண்

பார் பார் நேர்நேர்

பாதுகாவா சாதுசேவா ராமனே

—):*:(—

அள்ளி அள்ளிக்குடிக்கும் பள்ளநீரோடை என்றமெட்டு
ஹிந்துஸ்தான் பார்ஸி தாளம் ஆதி

38 பல்லவி

ராமாராமாவெனவே நாவாற்றுதித்திடும்
நாவலர்களையிப்போதேரட்சித்திடும் பூவுலகத்தினில்மீதே

அனுபல்லவி.

நடனங்காளிங்கன் திடமாய் மீதினில்
மடமடென்றுடுங் கடல் வண்ணனை ராமா ரா

சரணங்கள்

ஆய்ப்பாடியாயர்கள்தெய் வேந்திரர்க்கு நாட்பொங்கல்
அன்றேவழக்கப்படியாய் வைத்ததையே நன்றாகவேதான் துடியாய்
ஹ்ரிகிருஷ்ட்ணன்சொல்ல ஸ்ரீயும் பொங்கலிட
புரந்தரன்மழைபெய்யக் கிரியைக்குடைகொண்ட ராமா
அந்தநாளே சுக்ரீவன் வந்தபயமிட
அத்ததியரி வந்திட கோபமாகியு கந்தே வாலியைக் கொன்றிட
ஆசைசுக்ரீபனுக் கீசனுன ஜெக
தீசன்மகுடத்தை நேசமாய்ச்சூட்டிய ரா
ஆயிரநாமனேயான் ருயில்லாச்சேயன்போல்
அலைவதுமக்கழகாமோ கருடவாகனு கலைஞர்பாவமும் வீண்போ
அழகுலட்சுமியுடன் பழனிக்குமாருந்தரன் [மோ
பிழையன்றிப்பணிந்துக் கிழமையாய் பூஜித்து ராமா

---

செந்தூர்வாழ் கந்தனேயென்மீது என்ற மெட்டு பார்வி ஆதி

39 பல்லவி

ஸ்ரீஹரிநாராயண தேவா உன் சித்தமிரங்கியெனைக்காவா

அனுபல்லவி

கரிமுறைக்குடனே காக்கவந்தவனே
காவாநற் சேவாயித் தேவாதிதேவனே நீ ஸ்ரீஹரி

சரணங்கள்.

சிலையைப்பெண்ணாக்கிய நாதா உயர் திவ்யசெந்தாமரைப்பாதா
மலையைக் குடைகொண்ட வாமனு கோதண்ட
மாதவா ராகவா கேசவா நீதம்வா ஸ்ரீஹரி
ஆலிலைமேற் பள்ளிகொண்ட ஜெகத் தையனே சங்காழிபூண்ட

சிலி திரௌபதைக்கந் நாளில் மானங்காத்த
செந்தேனே சீமானே கோமானே பூமானே ஸ்ரீஹரி
சாதுசர்ச்சனருடன் கூடி நம் தாஸன் பழனிக்குமார் பாடி
நீதிசர்வேசனே கோதில்லா யீசனே
நேராதி வீரா சிங்காரா ஒய்யாரனை ஸ்ரீஹரி நா

---

மானேப்பிடியே வனக்கிளே யென்ற மெட்டு-சாப்பு,

40 கண்ணிகள்.

தாமோதரானந்த கோவிந்த வைகுந்த சங்குசக்ரபதியே நின்
றாளடிபணிந்தே னாளுவாயெந்தனே சாமி ஸ்ரீராமாப்ரக்யாதியே
சாரமறிந்த மூலாதாரமானயென் சத்துச்சிததானந்தசீமானே ஹரா
சாம்பசதாசிவ சங்கானுக்காக தான் பத்மாசுரனை வென்றோனே
கொஞ்சமெனு முந்தனெஞ்ச மிரங்காதா கூர்மவதாரனே கோவிந்தா நற்
குஞ்சரந்தன்னையை யஞ்சாமல் ரட்சித்த கோதண்டபாணியே வைகுந்தா
தஞ்சமென்றோருக்குன் வஞ்சகத்தை நீக்குந் தாசரதே யுனைக்கொண்டாட
தாஸன் பழனிக்குமார ரசையாய்வெங்க டேசன்மேற் நற்பதங்கள்பாட

---

வலேதப்பிய குறமான்களே என்ற மெட்டு-சாப்பு.

41 பல்லவி

ராமாயென்முறை வீண்போகுமா உனே நம்பித்துன்பப்படலாகுமா

அனுபல்லவி.

சோமா சம்மதமுமாகுமா யென் றுயர்தீர்க்க கால்வரநோகுமா
நேமாகுணியெடுத்தே கோமாமரம் விடுத்தே
நாமூசெய்தாயடுத்தே பூமாகூணமுரித்த ராமா

சரணங்கள்

செந்தாமரை மலரப்பாதனே யுன் றிருவடிதனக்காளாகினேன்
சுந்தா முகந்தா கோவிந்தனே யந்த நாத சின்மய வைகுந்தனே
சுந்தராஜா யென்மீது மைந்தன்மீதிவ்வாது
யிந்தவர்மமாகாது வந்தாளுவாயிப்போது ராமா

சீதா லட்சுமி சமேதரா க்ருபை செய்திடுவாயே வசீரகரா
அதாயைவருக்கு நீவீரா மாது துரௌபதை மானங்காத்ததீரா
நாதாகருணைஞான நீதாவற்புதனு
மாதாபிதாவுமான வேதாந்தவேதமோன ராமா
மேதினியோர் புகழ்நாதனே யெவர் வேண்டிடும்பாதவிநோதனே
ஓதும்பழனிக்குமார்க் குகந்தனே உத்தமசத்யனுய்வந்தோனே
ஆதியே யீசனே கோதில்லா வாசனே
நீதிசர்வேசனே சோதிப்ரகாசனே ராமா

ஐமுலகுதாம்கி என்ற மெட்டு-இ-ன்தோடி-ஆதி.

42 கண்ணிகள்.

தாமோதரா மாதவா முகுந்தா ஹரி ஹரி ஹரி
சங்குசக்ரா அட்டாக்கரா
சாரங்கபாணியே நாரணுவருள் புரி புரி புரி
எதுக்கெந்தன் மீது வாதுசெய்யாதே பூமாநேமா ராமா
இச்சையுடன் பட்சிமீதி
லேறிநீ யோடிவந் தேயெனை யாளும் பூமா பரந்தாமா
பக்தவச்சல அச்சுதனுன வைகுந்தானந்தா அந்த
அத்திசயனே நத்தினேன்யான்
ஆண்டவா வேண்டினேன் பாண்டவர்களுக்குகந்த கோவிந்தா
தாஸன் பழனிக்குமாரு தமிழை சாற்றி யேற்றிப் போற்றி
ஆசையுடன் நேசமதாய்
ஐயா மெய்யனோரா மையாவுன்பாதஞ் சூட்டி கீர்த்தி வாழ்த்தி

பட்டாபிஷேகமென்ற வர்ணமெட்டு தாளம்-சாப்பு.

43 கண்ணிகள்.

அட்டாதச புராணம் அட்டாக்கராவணிந்தா
யெட்டாப் பரவெளியே குட்டாரத்தைக்குடையாய்
இஷ்டித்த தாமோதரா உறிதனில் வைத்

தெட்டாவெண்ணெய்தீரா களவாண்டு கொட்டாப்பித்தல்வீரா
ஆதரிப்பாய மாதவனே சாதுவாக ஆள்வது உன்பாரமே
ஆதிமூலமேயென் ரேதிடும்யானைக்கி
நீதியுடனே நற் சோதியாகவந்து
ஓதியருள் செய்தாயே மானங்காத்தாய்
மாதிரௌபதைக்கு நீயே துயிலளித்தேசேதிகள் சொன்னாயே
ஐயனேவா மெய்யனே முன் துய்யனே யென்றண்டவனேததியே.
நாகமதுதனில் மேகவண்ண னேநல் யோகமுடன்பள்ளி
மோகமதாய்க்கொண்ட நாகசயன நாதா
காகத்திற்கோர் யூகக்கண் தந்தாய் நீதா க்ஷணங்கருட
வாகனத்தில் வேதா
நாடியேறி ஓடிவந்து பாடிவரம் நயமாகத்தா ஹரியே
வாசவன் பணிஜெக தீசனே சூரியப்பா
காசனே நேசமாய்ப் பூஜிக்குமுனது
தாஸன் பழனிக்குமார் துயரை சரு
வேசனே யகலக் கண்பார்
மதியூகனே மதுசூதனே ஸ்ரீ மோகனே மாதுலட்சுமி பாகனே

பஜாயுமேதில் ஷேனு காவ்னுஸே என்ற மெட்டு-ஆதி.

44 பல்லவி

ஆதிமூலமே வந்தெனையாளாயோ பாஞ்

அனுபல்லவி.

சோதியே யென் முறைகேளாயோ ஆதி

சரணங்கள்.

நீதியாய் நின்ற பூபா நிஷ்களானந்த ரூபா
